றால் மீனாட்சிப் பட்டணம் என்று பெயர். மீனாட்சி என்பது மீன் தூங்காது, அதுபோன்று தமிழகத்திலே தூங்காத நகரம் மதுரை. ஏன் என்று சொன்னால் இரவு முழுவதும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய பிரச்சினைக்கு பதில் வந்த உடன் அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி விட்டேன். நான் இங்கே என்ன பிரச்சினை என்பதையும், சொல்லிவிட்டேன் அல்லவா ? நீங்கள் பேசுவதற்கு இப்பொழுது பதில் தர முடியாது அல்லவா ? இன்னும் அலுவல்கள் நிறைய இருக்கின்றன.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பதில் தர முடியவில்லையென்று சொன்னாலும், பிரச்சினை என்ன என்று சொன்னால், இரவு 10 மணிக்கு மேல் கடைகளை எல்லாம் மூடச் சொன்னால் மற்ற நகரங்களில் நடப்பது போன்று முகமூடிக் கொள்ளை மற்ற கொள்ளைகள் நடந்துவிடும். மதுரையிலே இதுவரை அந்த மாதிரி சம்பவங்கள் இதுபோன்று இரவு முழுவதும் கடைகள் இருப்பதனால்தான் இதுவரை நடக்கவில்லை. அப்படி சம்பவங்கள் நடப்பதற்காகத் துணைபுரிகின்ற அளவுக்கு போலீஸ் அதிகாரிகள் 10 மணிக்கு மேல் கடைகள் இருக்கக்கூடாது என்ற அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் வந்த உடன் உங்களுக்குத் தருகிறேன்.

(ஊ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக மானியம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்னியாகுமரி மாவட்டம் பற்றிய பிரச்சனை, திரு. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் வெள்ளத்தினால் ஏராளமான வீடுகள் பாதிக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்னியாகுமரி மாவட்டத்தில் குடிசைகள் பாதிக்கப்பட்டன. இதே பிரச்சினையைக் குறித்து பேரவை விதி 55-ன்கீழ் திரு. அப்பு நடேசன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மே 5]

திரு. மா. சுந்தரதாஸ் : ஆனால் அன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்களும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்து பார்த்து 5 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். ஆனால் அந்த 5 கோடி ரூபாயில் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் தான் கொடுக்கப்பட்டது. கொடுக்கும்போது ஓலை வீடுகளுக்கு கொடுக்கவில்லை அங்கே இருந்த டெரஸ் வீடுகள் அதைப்போல ஓடு வீடுகளுக்கு எல்லாம் பணம் கொடுக்கப்பட்டது. $1\frac{1}{2}$ கோடி ரூபாய் தான் கொடுத்தார்கள். $3\frac{1}{2}$ கோடி ரூபாய் மீதி இருக்கிறது. ஆனால், அங்கே ஓலை வீடு என்று சொன்னால் குடிசை அல்ல. குடிசைகளுக்கு பணம் கொடுக்கப்பட்டது. குடிசைகளைப் பற்றி நான் பேசவில்லை. ஆனால் அங்கே இருக்கிற வீடுகள் என்று சொன்னால் ஓடு போடாமலே பெரிய வீடுகளை ஓலை போட்டு கட்டியிருப்பார்கள். ஏனென்றால் ஓலைகள் அதிகமாக கிடைக்கிற மாவட்டமாதலால் ஓலையில் கட்டுகிறார்கள். ஆகையினால் ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு எந்தவித பணமும் கொடுக்கப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு, தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது குறிப்பாக பெண்கள்தான் அதிகமானபேர் தினமும் சாகும்வரை உண்ணாவிரதம் என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பு உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள், அதற்காக 3, 4 நாட்கள் கழித்து போலீஸ் கைது செய்கிறது. ஆகவே நூற்றுக்கணக்கான மக்கள் கைதாகியிருக்கிறார்கள், பிறகு விட்டுவிட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் இது நியாயமான கோரிக்கை, பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. $3\frac{1}{2}$ கோடி ரூபாய் எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது. அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. நிதியமைச்சர் அவர்கள் பணமே இல்லையே, நீங்கள் திருப்பித் திருப்பி பணம் கேட்கிறீர்களே என்று சொல்லுவார்கள். ஆனால் நீங்கள் ஏற்கெனவே ஒதுக்கிய பணம் தான் இது. அந்தப் பணத்தை கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற ஓலை வீடுகளுக்கும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி அந்தக் கோரிக்கையை ஏற்று, அந்த மக்கள் சார்பாக அந்தப் பணத்தைக் கொடுத்து —குறைந்தபட்சம் ரூ. 5 ஆயிரம் ரூபாய் அளவுக்காவது கொடுக்க வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னபடி இப்பொழுது யாரும் அங்கே சாகும்வரை உண்ணாவிரதம் இல்லை. அவர்கள் எல்லாம் ஒவ்வொரு நாள் இருந்துவிட்டுப் போய்விட்டார்கள். காரணம், இந்த அரசின் கவனத்திற்குக்

கொண்டு வந்தாலே போதும், கோரிக்கைக்காக யாரும் உண்ணாவிரதம் இருக்கத் தேவையில்லை என்று பொதுமக்கள் நன்றாக தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் கன்னியாகுமரி மாவட்டக்காரர்கள் மிகவும் சிறந்தவர்கள். அவர்கள் எல்லாம் தவறான வழியில் போகமாட்டார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்ல, புயல் வெள்ளம் வந்தவுடன் புரட்சித் தலைவி அவர்கள் புயலைவிட அதிக வேகமாகச் சென்று, எல்லா இடங்களையும் பார்த்தார்கள் என்பதும், நிவாரணப் பணிகளைப் பார்த்தார்கள் என்பதும் நிதியைக் கொடுத்தார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பார்க்கிறபோது ஒரு இடத்தில் ஓட்டு வீடுகள்—7, 8 வீடுகள் இருந்தன. அங்கே உள்ளே தண்ணீர் சென்றுவிட்டது.—நேராகச் சென்று பல இடங்களைப் பார்த்தார்கள். ஓட்டு வீட்டுக்காரர்களுக்கும் பணம் கொடுக்க வேண்டுமென்ற உணர்வு வந்ததற்குக் காரணம், ஓட்டு வீடு கீழே இருக்கிறது. தண்ணீர் மேலே இருக்கிறது என்பதை நேரடியாகப் பார்த்தார்கள். உடனடியாக மத்திய அரசிடம் இந்தப் பிரச்சினையைக் கொண்டு சென்றார்கள். மாநில அரசு குடிசைகளுக்கு மட்டும்தான் கொடுக்கிறது. இங்கே ஓட்டு வீடுகளுக்குக் கொடுக்க வேண்டியது அதிகமாக இருக்கிறது, அதனால் உங்களுடைய பங்கைத் தர வேண்டுமென்று மத்திய அரசிடம் மாநில அரசு கேட்டுக்கொண்டது. எங்களிடத்தில் அப்படி எந்த விதி முறையும் இல்லை என்று மத்திய அரசு சொன்னது. இப்படி விதிமுறைகள் இல்லை என்று சொன்னாலும் மாநில அரசும் அப்படி விதிமுறைகள் இல்லை என்று சொல்லலாம். ஆனால் மக்களிடத்திலே நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிற மாநில அரசு விதிமுறைகளில் இருக்கிறதா, இல்லையா என்று பார்க்காமல், விதியை மீறி, மக்களுக்கு நன்மை செய்வது தான் விதி என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதை மாற்றி, அங்கே இருக்கிறவர்களுக்கு, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னபடி, 5000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்பதற்காக 5 கோடியே 31 லட்சத்து 65 ஆயிரத்தை வழங்கினார்கள். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் போய்ப் பார்க்கிறபோது 2710 வீடுகள்தான் பாதிக்கப்பட்டிருந்தன. முழுமையாக அங்கே பாதிக்கப்பட்ட குடிசைகள் 12 ஆயிரம் பகுதியாகப் பாதிக்கப்பட்டது ஆயிரத்து சொச்சம் வீடுகள். ஆனால் ஓட்டு வீடுகள் பாதிக்கப்பட்டது 2719. அவர்கள் எல்லோருக்கும் 5000 ரூபாய் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதிப் பணம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது புதியதொரு திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. ஹட்கோ மூலம் கடன் கொடுக்க மத்திய அரசு பணம் கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய மானியம் ரூ. 4,500/- மாநில அரசினுடைய மானியம் 4,500 ரூபாய் போட்டு, ஹட்கோ கடனாக 9000 ரூபாய் கொடுக்க இந்த

அரசு தயாராக இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாடு பூராவும் 18,000 வீடுகளுக்கு அரசு கொடுக்கத் தயராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றி நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தொடர்பு கொண்டேன். இதிலே தகுதி உள்ளவர்கள் யாராக இருந்தாலும் அரசு கொடுக்க தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(அ) குமுளூரில் ஆரம்ப சுகாதார மையம் துவக்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி ஜெ. லோகாம்பாள் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார் திருமதி ஜெ. லோகாம்பாள்.

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-ல் குமுளூரில் ஒரு ஆரம்ப சுகாதார மையத்திற்காக ரூ. 10,000 செலுத்தி தேவையான நிலம், கட்டடம் வழங்கப்பட்டும் இன்றுவரை ஆரம்ப சுகாதார மையம் துவக்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த, அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை.

குமுளூர் என்னும் பெயரில் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இயங்கவில்லை. ஆனால் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் குமுளூர் என்ற கிராமம் உள்ளது. புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் மருந்தகம் ஏற்படுத்த வேண்டி ரூ. 10,000, 2—4—1986 அன்று செலுத்தப்பட்டுள்ளது. மேலும் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றிய ஆணையரால் 0.90 சென்ட் நிலம் தானமாக கொடுப்பதாக 23—5—1989 அன்று ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட்டது.